**தமிழ் இணையக் கல்விக்கழகம்**
**சென்னை – 600 025.**

**இளநிலைத் தமிழியல் – பட்டம் (B.A. TAMILOLOGY – Degree)**
**முதலாம் ஆண்டு – முதற் பருவம்**

**நேரடி எழுத்துத் தேர்வு (OFFLINE WRITTEN EXAMINATION)**

**ஜனவரி – பிப்ரவரி 2023**
**P101 சிறுகதையும் புதினமும்**

**காலம் : 3 மணி நேரம்** **மதிப்பெண்கள் : 75**

(குறிப்பு: பிரிவு – 1 இல் இருந்து அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டும். விடை ஒன்றிற்கு ஒரு மதிப்பெண். பிரிவு – 2இல் இருந்து ஐந்து வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும். ஒவ்வொரு விடையும் ஒரு பத்திக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 3 மதிப்பெண்கள். பிரிவு – 3இல் இருந்து மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடையளிக்க வேண்டும். ஒவ்வொரு விடையும் 3 பக்கங்களுக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 15 மதிப்பெண்கள்.)

**பிரிவு – 1**

**ஒரு சொல் / தொடரில் விடை தருக.** **(15x1=15)**

1. சாகித்திய அகாதமி விருது பெற்ற முதல் தமிழ் எழுத்தாளர் யார்?
2. வா.வே.சு ஐயரின் குளத்தங்கரை அரசமரம் என்ற கதையில் அமைந்துள்ள நோக்கு நிலை யாது?
3. அழகிரிசாமி எந்தெந்தப் பத்திரிகைகளில் பணியாற்றியுள்ளார்?
4. பணத்தின் ஆதிக்கம் பற்றிப் பேசும் கதை ஒன்றின் பெயரினைக் கூறுக.
5. விளம்பர மோகத்திற்கு அடிமையாகும் பெண்ணைப் பற்றிக் கூறும் சிறுகதை யாது?
6. சு. சமுத்திரம் தன் சிறுகதையில் 'மாப்பிள்ளை' என்று யாரைக் குறிப்பிடுகிறார்?
7. உளவியல் நோக்கில் எழுதப்பட்ட சிறுகதை எது?
8. உலகின் முதல் புதினம் எது?
9. தமிழ் நாவலின் தந்தை யார்?
10. சுஜாதாவின் இயற்பெயர் என்ன?
11. நாரண துரைக்கண்ணன் எழுதிய தழுவல் புதினம் எது?
12. கி.ராஜநாராயணனின் எந்த நாவலுக்குச் சாகித்திய அகாதெமி விருது கிடைத்தது?
13. முதன் முதலாக இரயிலைப் பார்த்த மக்கள் என்ன செய்தார்கள்?
14. நாவலாசிரியர் கையாளும் இரு உத்திகளைக் குறிப்பிடுக.
15. என் இனிய இயந்திரா எத்தகைய புதினம்?

## பிரிவு – 2

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒரு பத்தி அளவில் விடை தருக. (5x3=15)**

1. சிறுகதைக்கும் நாவலுக்கும் உள்ள வேறுபாடுகளை எழுதுக.
2. மணிக்கொடி இதழ் குறித்து எழுதுக.
3. கு. அழகிரிசாமியின் பிறப்பும் வளர்ப்பும் குறித்து எழுதுக.
4. பிரபஞ்சனின் சிறுகதைப் படைப்புகளைக் கவிதா பதிப்பகத்தார் எவ்வாறு பாராட்டுகின்றனர்?
5. புதினத்தில் இடம்பெறும் கருப்பொருள் குறித்து எழுதுக.
6. பொழுதுபோக்கு நாவலில் காணப்படும் கதைக்கரு யாது?
7. இராஜம் கிருஷ்ணனின் நாவல் படைப்புத்திறனில் அவருடைய எழுத்து நடைபற்றி எழுதுக.
8. தியாகபூமி – தலைப்புப் பொருத்தம் பற்றி எழுதுக?

## பிரிவு – 3

**மூன்று பக்கக் கட்டுரை வடிவில் விடை தருக. (3x15=45)**

1. (அ) சிறுகதை வளர்ச்சியில் பெண் எழுத்தாளர்களின் பங்கை விளக்குக.

(அல்லது)

(ஆ) கு.அழகிரிசாமியின் படைப்பாக்க உத்தியை ஆராய்க.

2. (அ) கதைக்கருவும் களமும் என்ற தலைப்பில் தி.ஜா கூறுவனவற்றைத் தொகுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) சு.சமுத்திரம் தனது சிறுகதை நோக்கும் போக்கும் குறித்து யாது கூறுகிறார்?

3. (அ) வரலாற்றுப் புதினங்கள் குறித்துக் கட்டுரை வரைக.

(அல்லது)

4. (ஆ) கானல் – புதினத்தின் பாத்திரங்கள் குறித்து எழுதுக.

❋❋ ❋